RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224107

# கலைஞர் கருணாநிதியின் முதல் சட்டமன்ற உரை ஒரு பார்வை

சா. செந்தில் கண்ணன் [அ, *], ப. தமிழரசி [அ]

[அ] மொழியியல் துறை (தமிழ்த்துறை) கற்பகம் உயர்கல்விக் கழகம், கோயமுத்தூர்-21, இந்தியா

# Kalaignar Karunanidhi's First Legislative Assembly Speech - An Overview

S. Senthilkannan [a, *], P. Tamilarasi [a]

[a] Department of Linguistics (Tamil Department), Karpagam Academy of Higher Education, Coimbatore -21, India

* Corresponding Author: Senthilkannanbablma@gmail.com

Received: 17-06-2022
Revised: 30-09-2022
Accepted: 04-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Kalaignar delivered his first legislative assembly speech on 4.5.1957, speaking on the Governor's address. In that speech, he highlighted that assembly members must maintain decorum while speaking in the legislature, discussed the urban surveys conducted by rulers at that time to identify crimes, emphasized the indispensable role of opposition parties in the assembly, noted that Kanyakumari was merged with Tamil Nadu based on linguistic principles, pointed out that the Devikulam Perimedu region was not merged with Tamil Nadu but was mostly assigned to Kerala where Tamil-speaking people were subjected to injustice, spoke about how farmers were affected by tenancy types such as Kaieru week and Cow week, mentioned that land reform laws did not benefit poor farmers, and spoke on the food shortage that had arisen at the time. Kalaignar’s speeches in the assembly greatly contributed to the nation’s progress and the welfare of the people.

**Keywords:** Kalaignar Karunanidhi, Kalaignar speech, Politics, Tamil Nadu Assembly

## முன்னுரை

1956 ஆம் ஆண்டு மே மாதம் 17, 18, 19, 20 தேதிகளில் திருச்சியில் திமுகவின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற்றது. திமுக தொடங்கப்பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், திமுக குறித்து பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் ஒரு அறைக்கூவல் விட தவறமாட்டார். திமுக காரர்கள் வெட்டவெளியில் நின்று பேசுகிறார்கள். அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டும் என்பதுதான் அந்த அறைக்கூவலாகும். அவரது அந்த அறை கூவலை அன்பான அழைப்பாகவே கருதி அறிஞர் அண்ணா அவர்கள், இனிமேல் வரும் தேர்தல்களில் திமுக போட்டியிடும் என்ற ஒரு தீர்மானத்தை திருச்சி மாநில மாநாட்டில் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

## கலைஞர் கருணாநிதி போட்டியிட்ட முதல் சட்டமன்றத் தேர்தல்

திருச்சி மாநில மாநாடு தீர்மானத்தின் விளைவாக கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் தொகுதிகளை அறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தின் பொதுச்செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். கலைஞர் கருணாநிதி அவர்கள் தான் பிறந்த ஊரான திருக்குவளை உள்ளடங்கிய நாகப்பட்டினம் தொகுதியில் போட்டியிடலாம் என்று முடிவு செய்திருந்தார். ஆனால்

அறிஞர் அண்ணா கலைஞர் கருணாநிதி குளித்தலை தொகுதியில் போட்டியிடுவார் என்று அறிவித்துவிட்டார். மறுப்பேதும் தெரிவிக்காமல் கலைஞர் கருணாநிதி குளித்தலையில் போட்டியிட்டார். அந்த தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி நாகப்பட்டினம் வரையில் இருந்த அனைத்து தொகுதிகளிலும் குளித்தலையில் போட்டியிட்ட கலைஞர் கருணாநிதி மட்டுமே வெற்றி பெற்றார். இவ்வாறாக கலைஞர் கருணாநிதியின் சட்டமன்ற நுழைவுக்கான கதவு திறக்கப்பட்டது. 1957 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பொதுத்தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில் கலைஞர் கருணாநிதி உட்பட 15 பேர் வெற்றி பெற்று சட்டமன்றத்தில் இடம்பெற்றார்கள். அது முதல் தான் மறையும் வரை தான் போட்டியிட்ட அனைத்து சட்டமன்ற தேர்தல்களிலும் கலைஞர் கருணாநிதி வெற்றி பெற்றார். கலைஞர் கருணாநிதி,

கேட்டார் பிணிக்கும் தகயவாய் கேளாரை

வேட்ப மொழியே தான் சொல்

என்னும் குரளுக்கு ஏற்ப சொற்பொழிவாற்றும் சொல்லேர் உழவர் ஆவார். கலைஞர் கருணாநிதியின் சட்டமன்ற உரைகளாகட்டும் மற்ற உரைகளாகட்டும் கேட்பவர்களின் மனதை கவரும் தன்மையுடனும், அதை ஏற்காதவர்களையும் ஏற்றுக்கொள்ள வைக்கும் வல்லமை உடையதாகவும் இருக்கும். கலைஞரின் எல்லா உரைகளும் கேட்பவர்களின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும், அந்த உரையை கேட்டு பயனடையும் வகையிலும் அமைந்திருக்கும்.

திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிரிதோர் சொல் அச்சொல்லை வெல்லும் சொல் இன்மை அறிந்து சொல்லுவதும் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலை ஆகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் இவை இரண்டும் கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டமன்றத்தில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது மேற்காணும் உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும், விறுவிறுப்பும், ஆழமும், அழகும் மிகுந்திருக்கும் கலைஞரது சட்டமன்ற உரைகள் காலத்தின் கண்ணாடிகள் ஆகும். கலைஞர்கள் உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளி விவரங்களும், வாத திறமையும், நகைச்சுவையும், மக்கள் நலன் காக்கும் உரைகளும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திருக்க கூடியவைகளாகும். கலைஞர் கருணாநிதி அவர்கள் 4.5.1957 அன்று, முதல் முறையாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையின் மீது உரையாற்றினார். அவ்வுரையை விரிவாக காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலைஞர் கருணாநிதியின் முதல் சட்டமன்ற உரையில் நடுநிலை பார்வை கலைஞர் கருணாநிதி, மேன்மைதங்கிய கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி நான் போற்றவும் வரவில்லை, தூற்றவும் வரவில்லை, என்னுடைய கருத்துரையை ஆற்றவே வந்திருக்கின்றேன். கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி இங்கு நண்பர்கள் அபிப்பிராயம் தெரிவித்த நேரத்தில் எதிர்க்கட்சியினரை பற்றி இங்கே பேசப்பட்ட நேரத்தில் குறை கூறுவதையே எதிர்க்கட்சியினர் தொழிலாக கொண்டு பேசுகிறார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டது. குறைகளை எடுத்துச் சொல்லி நிறைவேற்றுவதற்காகத்தான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோமே தவிர செய்திருக்கின்ற காரியங்களை பன்னிப் பன்னிச் சொல்லி அவைகளை பாராட்டுவதற்காக நாம் இங்கு வரவில்லை. அத்தகைய காரியங்களுக்காக நடத்தப்படுகின்ற பாராட்டு விழாக்கள் எல்லாம் வெளியே அந்த காரியங்களால் பயன்பெறுகிறவர்களால் நடத்தப்படுவது மிக பொருத்தம் உடையது என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. குறைகளை எடுத்துச் சொல்லி சரி செய்து கொள்வதற்காகவே சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம் என்று தன்னுடைய முதல் சட்டமன்ற உரையை தொடங்கி இருக்கிறார். இதன் மூலம் தான் யாரையும் போற்றுவும் வரவில்லை தூற்றவும் வரவில்லை என்றும், ஆளும் கட்சியையோ மற்றவர்களையோ குறை கூறுவதை தொழிலாகக் கொண்டவன் அல்ல என்பதையும், குறைகளை எடுத்துச் சொல்லி சரி செய்யக்கோரி மக்கள் நலனுக்காக வாதாடவே சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம் என்று

கூறுவதன் மூலம் கலைஞரின் நடுநிலை தவறாமையை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. (பிரேமா.மு.,2009)

## முதல் சட்டமன்ற உரையில் கலைஞர் குறிப்பிடும் நகர்ச் சோதனை

கலைஞர் தமது முதல் சட்டமன்ற உரையில், அந்த காலத்தில் மன்னர்கள் மக்களின் குறைகளை தெரிந்தவர்களுக்கு நல்வாழ்வு நல்குவதற்காக இரவு நேரங்களில் நகர் சோதனை என்ற பெயரால் மாறுவேடம் தாங்கி மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை எல்லாம் தெரிந்து கொள்ள மண்டபத்தில் உட்கார்ந்து அந்த குறைகளை பேசினார்கள் என்று பழைய கால சரித்திரத்தில் இருந்து படித்திருக்கிறோம். இது மன்னர்கள் வாழும் காலம் அல்ல. மக்கள் ஆளுகின்ற காலம். இந்த காலத்திலும் அதே போல் மந்திரிகள் மாறுவேடம் தாங்கி மக்களின் குறைகளை கண்டு வர வேண்டும் என்று நான் கூறவில்லை. நாடகத்தில் அனுபவம் பெற்ற நாங்கள் ஒருவேளை ஆளும் கட்சியாக வந்தால் வேடங்களை போட்டு மக்களின் குறைகளை கண்டுபிடிக்க முடியும். அந்த அனுபவம் இல்லாத மந்திரிகளை அதைச் செய்ய வேண்டும் என்று கூறமாட்டேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன் என்று குறிப்பிடுகிறார். (கருணாநிதி.மு.,2022) இவ்வுரையில் மன்னர்கள் காலத்தில் நடைமுறையில் இருந்த நகர்ச்சோதனை பற்றியும், மக்களால் மக்களுக்காக ஆளப்படும் ஆட்சியை மக்களாட்சி என்று தத்துவத்தையும், ஆளும் கட்சியினரால் செய்ய முடியாத செயல்களை செய்யச் சொல்லி கூற மாட்டேன் என்றும் நாங்களும் ஒரு காலத்தில் ஆளும் கட்சியாக வருவோம் என்ற நம்பிக்கையையும் காணலாம்.

## கலைஞர் குறிப்பிடும் எதிர்க்கட்சிகளின் இன்றியமையாமை

கலைஞர் எதிர்க்கட்சி ஒன்று தேவை என்பது, எதை எடுத்தாலும் எதிர்த்து பேசுவதற்காக அல்ல என்பதை இங்கு பேசிய பலரும் சுட்டிக்காட்டினார்கள். ஆளுகின்றவர்கள் யாரை துணை கொள்ள வேண்டும் என்பதை பற்றியும் வள்ளுவர் பெருமான் தன்னுடைய திருக்குறளில் பெரியாரைத் துணைக்கோடல் என்ற அதிகாரத்தில் பெரியாரை தங்களுடைய துணைவராக கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார். எந்த பெரியாரை துணை கொள்ள வேண்டும் என்று கூறினார் என்றால் எதையும் சரி சரி என்று சொல்லி கண்டிக்காமல் இருக்கின்ற பெரியாரை அல்ல.

இடிப்பாரை இல்லாத ஏமாறா மன்னன்

கெடுப்பார் இல்லாத கெடும்

என்று வள்ளுவர் குரள் வகுத்திருக்கின்றார். சபையிலே ஆளுகின்ற தம்மை இடித்துச் சொல்லுகின்ற பெரியாரை துணைவராக கொள்ளாத மன்னன், பகைவர்கள் இல்லையாயினும் தன்னைத்தானே கெடுத்துக் கொள்வான். கெட்டுவிடுவான் என்று சொல்லி இருக்கிறார். அந்த முறையிலே கடிந்து சொல்வதற்காகவே வந்திருக்கிற பெரியார்களுடைய துணையை ஆளுகின்றவர்கள் பெற வேண்டும் என்று வள்ளுவர் அந்த காலத்திலேயே உணர்ந்து சொன்னார் போலும் என்று கலைஞர் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் இன்றியமையாமை குறித்து தனது முதல் சட்டமன்ற உரையில் உரையாற்றி இருக்கிறார். இவ்உரையின் மூலம் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியின் தேவை பற்றியும் எதிர்க்கட்சி என்பது எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டியது இல்லை என்றும், எல்லாவற்றையும் சரி சரி என்று சொல்லி ஆளுங்கட்சியை கண்டிக்காமல் இருக்கும் பெரியாரை அல்ல, ஆளுங்கட்சி தவறு செய்யும் போது எடுத்துச் சொல்லுகிற பெரியாரைத் துணையாக கொள்ள வேண்டும் என்றும் கலைஞர் எதிர்க்கட்சிகளின் இன்றியமையாமை குறித்து உரையாற்றி இருப்பது தெரிய வருகிறது.

## கன்னியாகுமரி, தேவ குளம், பீர்மேடு குறித்த கலைஞரின் உரை

மாநிலங்களின் எல்லை விரித்தல் பற்றி கவர்னர் உரையின் மீது கலைஞர் உரையாற்றிய போது, இங்கு பேசிய பல நண்பர்கள் கன்னியாகுமரியை வரவேற்கிறோம் என்று கூறி இருக்கிறார்கள். அந்த கன்னியாகுமரியை நாம் தேவிகுளக்கரையிலோ அல்லது பீர்மேட்டின் மீதும் நின்று கொண்டு வரவேற்காமல் சிதைந்து போன செங்கோட்டையின் மேல் நின்று கொண்டு வரவேற்கிறோம் என்று எண்ணும்போது தேவிகுளம், பீர்மேட்டை பெறுவதற்கு வழிவகை காணப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறார். இதன் மூலம் கன்னியாகுமரியை மட்டும் தமிழகத்தோடு தமிழ் பேசும் பகுதிகளான தேவ குளம் பீர்மேட்டை தமிழகத்தோடு இணைக்காமல் விட்டுவிட்டதை ஆளுங்கட்சி மாநில பிரிவினையில் சரியான அக்கறை காட்ட வில்லை என்பதை எடுத்துரைக்கிறார்.

## கலைஞரின் முதல் சட்டமன்ற உரையில் நில சீர்திருத்த சட்டங்கள்

நிலச் சீர்திருத்த சட்டங்களின் பெயரால் நியாய வார சட்டங்களின் பெயரால் விவசாயிகள் திருப்தி அடைந்து சுமுகமான நிலைமையில் இருக்கிறார்கள் என்று கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். என்னுடைய குளித்தலை தொகுதியை பொருத்தவரையிலும் திருச்சி மாவட்டத்திலும் இன்றைய தினம் இந்த நியாயவார சட்டத்தின் காரணமாகவும் சீர்திருத்தச் சட்டத்தின் காரணமாகவும் எழுந்த வழக்கு உயர்நீதிமன்றம் சென்று அங்கு அளிக்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக மக்களுக்கு வேதனையை உண்டாக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதை யாரும் மறந்து விடவில்லை. மறுத்து விடவும் முடியாது. விவசாயிகள் வீடுகளில் தங்களுடைய மனைவி மக்களுடன் வேதனையை அடைந்து புலுங்கி கொண்டிருக்கிறார்கள். குமுறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நியாயவார சட்டம் காரணமாக குளித்தலை தொகுதி நங்கவரம் பகுதியிலும் திம்மாச்சிபுரம் பகுதியிலும் விவசாயிகள் எந்த அளவுக்கு கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள் என்பதை தினம் தினம் பத்திரிகைகளில் வரும் செய்திகளை கண்டும் விவசாயிகள் பகுதியில் எழுப்பப்படும் கூக்குரலை கண்டும் எந்த முறையில் அங்கு நிலைமை இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். திருச்சி மாவட்டத்தை பொருத்தவரையில் அங்கு கையேறு வாரம் என்றும் மாட்டு வாரம் என்றும் இரண்டு வித வாரம் இருக்கின்றன. இப்படி இரண்டு விதமான வாரம் இருப்பதன் காரணமாக அவர்களுக்கு இந்த நியாயவார சட்டம் பயன்படக்கூடாது என்று கருதி அதை விவசாயிகள் பயனடையாத முறையில் உயர்நீதிமன்றத்திற்கு சென்று அங்கு தீர்ப்பு வாங்கி வந்திருக்கிறார்கள். அந்த தீர்ப்பின் காரணமாக விவசாயிகள் நியாய வார சட்டத்தின் பயனை அடைய முடியாமலும் வெளியேற்ற தடுப்பு சட்டத்தின் பலனை அடைய முடியாமலும் இருக்கிறார்கள். இன்றைய தினம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அந்த ரீதியில் வழங்கியிருக்கிறது. அதன் காரணமாக மாட்டு வார ஏறுக்காரர்கள் என்றால் யார்? கையேறுகாரர்கள் என்றால் யார்? என்ற பிரச்சனையை எழுப்பி அதைப்பற்றி விளக்கத்தை கவனிக்கும் போதுதான் நிலைமை தெரிய வருகிறது.

மாடும் தந்து அவர்களுடைய சொந்த உழைப்பை சிந்தி நிலம் உடையவர்களிடத்தில் விதை, உரம், எரு இவைகளைப் பெற்று அப்படி பெறுகிற அந்தப் பொருள்களுக்காக விளைச்சலில் அவர்கள் தனியாக தானியமாகவோ அல்லது பொருளாகவோ எடுத்துக் கொண்ட பிறகு 60:40 என்று பெறவேண்டும் என்று சொல்லப்பட்டாலும் இன்றைய தினம் மாட்டுக்காரர்கள் விவசாயிகள் அல்ல என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அதைப்போலவே கையேறுகாரர்கள் யார் என்றால் அவர்கள் பெரும்பாலும் ஆதிதிராவிட வர்க்கத்தை சேர்ந்தவர்கள் பழங்குடி மக்கள் என்கின்ற பிற்பட்ட மக்கள் பாட்டாளி மக்கள் அப்படிப்பட்ட வர்க்கத்தினருக்காக தான் இந்த நியாய வார சட்டம் செய்யப்பட்டது அந்த அடிப்படையில் அவர்களுக்கு என்று இந்த நியாயவார சட்டத்தையும் நில வெளியேற்ற தடுப்பு சட்டத்தையும் கொண்டு வந்தாலும் அவர்கள் அவைகளின் பல பயனை அடைய முடியாமல் நீதிமன்ற தீர்ப்பளித்துவிட்டது அந்த அடிப்படையிலாவது எந்த

அளவிலாவது இந்த நியாயவார சட்டம் அவர்களுக்கு நன்மை வழங்கியிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும் இப்படிப்பட்ட மாட்டு ஏறுகாரர்களும் கையேறு காரர்களும் சாகுபடியாளர்கள் அல்ல என்கின்ற தீர்ப்புக்கு இன்று ஆளாகியிருக்கிறார்கள். அதன் மேல் அப்பிள் செய்யப்பட்டு மீண்டும் வழக்கு வரும் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் எடுத்துக் கொள்ளப் போவதாக இருக்கிறது. அதற்குள் விவசாயிகளுடைய நிலைமை என்னவென்றால் முத்து முத்தாக வியர்வை சிந்தி மணி மணியாக நெற்குவியலை தந்தவர்கள் களத்து மேட்டிலோ காவலர் புடை சூழல் அதை கொட்டி விட்டு வீட்டிலே வறுமை தேள் கொட்டிட வாடிக்கிடக்கிறார்கள். குளித்தலை தொகுதியில் இப்பொழுது நிலை வருகிற இப்படிப்பட்ட நிலைமை பற்றி கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட மறந்தது வருந்தத்தக்க ஒன்று.

நெருக்கடிகளுக்கு ஆளாகி இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு என்ன செய்யப்பட வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். உயர்நீதிமன்றம் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு முன்னதாக புதிய ஒரு திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். அதையும் துரிதமாக கொண்டு வர வேண்டும். ஏழை தொழிலாளர்களுடைய ஏழை விவசாயிகளுடைய அவல நிலைமையை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்போகிறது என்பதை பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் ஒன்றுமே இல்லை என்பதை மிகவும் கவலை கொண்டு தெரிவித்துக் கொள்கின்றேன் என கலைஞர் தமது முதல் சட்டமன்ற உரையில் நிலச்சீர்திருத்தங்கள் பற்றி உரையாற்றியுள்ளார். நிலச்சீர்திருத்த சட்டங்களால் ஏழை விவசாயிகள் விவசாய தொழிலாளர்கள் வேதனையடைந்து இருக்கின்றார்கள். குமுறிக் கொண்டிருக்கின்றார்கள் என்றும், கூரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள் என்றும், விவசாயிகள் நியாயவர சட்டத்தின் பயனை அடைய முடியாமலும் வெளியேற்ற தடுப்பு சட்டத்தின் பயனை அடைய முடியாமல் இருக்கிறார்கள் என்றும், நியாய வார சட்டம் விவசாயிகளுக்கு நன்மையை வழங்கவில்லை என்றும், முத்து முத்தாக வியர்வை சிந்தி மணி மணியாக நெற்குவியலைத் தந்தவர்கள் களத்து மேட்டில் காவலர்கள் புடை சூழ வீட்டிலே வறுமைத் தேள் கொட்டிட வாடி இருக்கிறார்கள் என்றும், புதிய ஒரு திருத்த சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்றும், ஏழைத் தொழிலாளர்களுடைய ஏழை விவசாயிகளுடைய அவல நிலையை ஓட்ட வேண்டும் என்றும் உரையாற்றியதின் மூலம் விவசாயிகளுக்காக வாதாடியதை உணர முடியும்.

## கலைஞர் குறிப்பிட்ட உணவு பற்றாக்குறை

கவர்னர் அவர்களுடைய உரையில் உணவு விலை குறையவில்லை என்று குறிப்பிட்டாலும் உணவு விலை அதிகமாகி கொண்டிருக்கின்றது என்பதை மறுக்க இயலாது. எங்கு பார்த்தாலும் உணவு விலை விசம் போல் தினம் தினம் ஏறிக் கொண்டிருக்கிறது. இதற்கு காரணம் என்ன என்பதை கவனிக்க வேண்டும். ஆந்திராவில் உள்ள பெருவாரியான உபரி அரிசி தமிழகத்திற்கு பயன்படாமல் நட நாட்டில் சோள பஞ்சம் ஏற்பட்டு இருக்கிற காரணத்தால் அங்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்குள்ள கோதுமையை கொண்டு வடக்கே சரி கட்டுவதற்கு பதிலாக ஆந்திராவில் உள்ள உபரியான அரிசியை தமிழ்நாட்டிற்கு பயன்படாத முறையில் எடுத்துச் சென்றதானது இங்கு விலைவாசி உயர்வுக்கு காரணமாக இருக்கிறது. இதைப்பற்றி கவர்னர் அவருடைய உரையில் எந்தவிதமான குறிப்பும் காணப்படவில்லை. இப்படி விலைவாசிகள் உயர்வைத் தடுக்க எப்படிப்பட்ட வழிவகை செய்யப்படும் என்பதும் சொல்லப்படவில்லை. உணவு நிலைமையை சமாளிப்பதற்கு சர்க்கார் உணவு பெருக்கத்திற்கு திட்டங்கள் செய்ய வேண்டும். இந்த சர்கார் கை இல்லாத ஊமையின் நிலையில் தான் இருக்கிறார்கள். தங்களுடைய நிலைமை என்ன என்று சொல்ல முடியாமல் ஊமையாக இருந்து சுட்டிக் காட்டுவதற்கும் கையற்ற முறையில் இருந்து கொண்டிருந்தால் உணவு நிலை பற்றாக்குறை இதுபோன்று எப்பொழுதும் நீடித்துக் கொண்டே இருக்கும். இத்தகைய நிலைமைகளிலிருந்து திராவிடம் விடுபட்டு திராவிடம் தனித்து

செழித்து நின்று வளம் பெற்று வாழ நல்ல முறையில் திட்டங்களை திட்ட வேண்டும் என்று உணவு பற்றாகுறையைப்பற்றி உரையாற்றியிருக்கிறார். இவ் உரையின் மூலம் உணவுப் பொருட்களின் விலை அரசு குறிப்பதைப் போல் குறையாமல் விஷம் போல் ஏறிக்கொண்டு மக்களை துன்புறுத்துவதையும் காரணத்தை கண்டறிய வேண்டும் என்பதும் உணவு பெருக்கத்திற்கு திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்றும் அரசாங்கம் கையில்லாமல் உவமை நிலையிலிருந்து விடுபட வேண்டும் என்றும் திராவிடம் தனித்து செழித்து வளம்பெற வாழ வேண்டும் என்றும் உரையாற்றியதின் மூலம் தமிழ்நாடு எப்படி வாழ வேண்டும் என்பதை படம் பிடித்து காட்டுகின்றார்.

## தன்னுடைய குளித்தலை தொகுதி குறித்து கலைஞரின் உரை

கலைஞர் தன்னுடைய தொகுதியான குளித்தலையில் குடகனார் திட்டம் தேவை என்று முயற்சி 1952 ஆம் ஆண்டு முதற்கொண்டு இருந்து வருகிறது. அதைப் பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லப்படும் வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடமும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடமும் மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களிடமும் பல தடவை பல மனுக்கள் மூலமாக குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. அங்குள்ள பொதுப்பணித்துறை கண்காணிப்பாளர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்து துரிதமாக நிறைவேற்ற வேண்டும் என்பதை ஆராய்ந்து சொல்லி இருக்கிறார். அழகாபுரி என்கிற இடத்தில் ஒரு அணை கட்டினால் அதன் மூலமாக சுமார் 10,000 ஏக்கர் புஞ்சை நிலத்தை நஞ்சையாக மாற்றக்கூடிய வசதி இருக்கிறது. அதற்கு 12 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது கவனிப்பாரற்று கிடக்கிறது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் எல்லாம் அலட்சியப்படுத்தப்படுவது பற்றி எல்லாம் ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் சிறிதும் குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்து தன்னுடைய முதல் சட்டமன்ற உரையினை கலைஞர் நிறைவு செய்கிறார். (சிவஞானம். ம.பொ.,1999)

## முடிவுரை

கலைஞர் அவர்கள் தனது முதல் சட்டமன்ற உரையாக 4.5.1957ல் ஆளுநர் உரையின் மீது உரையாற்றினார். அவ்வுரையில் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் உரையாற்றும்போது நடுநிலை தவறாமல் உரையாற்ற வேண்டும் என்பதையும் குற்றங்களை கண்டறிய அந்த காலம் மன்னர்கள் மேற்கொண்ட நகர சோதனை பற்றியும், சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் பங்கு மிகவும் இன்றியமையாதது என்றும், கன்னியாகுமரி மொழிவாரி அடிப்படையில் தமிழகத்தோடு இணைக்கப்பட்டதையும், தேவிகுளம் பீரிமேடு தமிழகத்தோடு இணைக்கப்படாமல் பெரும்பாலும் தமிழ் மொழி பேசும் மக்கள் பகுதியை கேரளத்தோடு இணைக்கப்பட்டு அநீதி இழைக்கப்பட்டுள்ளதையும், கையேறு வாரம் மாட்டு வாரம் என்ற குத்தகை வகைகள் மூலம் விவசாயிகள் பாதிக்கப்படுவதையும், நிலச் சீர்திருத்த சட்டம் ஏழை விவசாயிகளுக்கு பயன்படவில்லை என்றும், இன்றைய நாளில் ஏற்பட்ட உணவு பற்றாக்குறை பற்றியும் உரையாற்றி இருக்கிறார். கலைஞர் சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் பெருந்துணை புரிந்தன. கலைஞருடைய உரைகள் நாட்டு மக்களின் நலிவு நீக்கி நல்வாழ்வு தரக் கூடியதாகும். கலைஞரின் சட்டமன்ற உரைகள் காலத்தை கடந்து நிற்கும் கல்வெட்டுகள் ஆகும்.

## References

Karunanidhi, M. (2022) Manila Suyatchi, Aazhi Publications, Chennai, India

Prema, M. (2009) Karunanidhi Sattamandra Uraikal Oor Aivu, University of Madras, Chennai, India

Sivagnanam, M.P. (1999) Maanila Suyatchi Kilarchiyin Varalaru, Poongodi Publications, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License